Date – 12-03-2026

MCOP – 187/2023

**ம.சா.1– ராய்**

**<u>மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:–</u>**

எனது தரப்பில் மருத்துவமனையிலிருந்து மருத்துவ குறிப்பு சான்று மற்றும் மருத்துவமனை பில்கள் முறையே ம.சா.ஆ. 8 மற்றும் 9 ஆக குறியீடு செய்து, எனது மகனின் சம்பளம் வரவு வைக்கக்கூடிய வங்கி கணக்கு ம.சா. ஆ. 10 ஆகவும் குறியீடு செய்து, மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் நிரந்திரமாக கேரளாவில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். விபத்தின் போது நான் சம்பவ இடத்தில் இருந்தேனா என்றால் இல்லை. அதனால் விபத்தின் போது தலைகவசம் என் மகன் அணிந்திருந்ததாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல. அவரது உடன் சென்றவர் என்னிடம் சொன்னார். முதல் தகவல் அறிக்கையில் இரு சக்கர வாகனத்தில் சென்ற 3 நபர்களும் தலைகவசம் அணிந்திருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 3 நபர்களும் நண்பர்கள் என்றால் சரிதான். மோட்டார் வாகன சட்ட விதிகளுக்கு முரணாக 3 நபர்கள் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டு என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் கார் ஓட்டுநரின் விவரமும், ஓட்டுநர் உரிமமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை காண்பிப்பதற்கு வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் பணியாற்றும் நிறுவனம் மூலம் தான் அவரது பணி குறித்து நிறுபிக்க முடியும் என்றால் சரியல்ல. அதே போல் நிறுவனத்தின் பணி நியமன ஆணை எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் உள்ளது. மனுதாரருக்கு மாதம் 30,000 சம்பளம் நிறுபிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வங்கி கணக்கு விவரத்தில் என் மகன் பணிப்புரியும் நிறுவனத்தில் இருந்து சம்பளம் பதிவேற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அதே போல் நிறுவனத்தில் பணியிலிருந்து விடுவித்த சான்றிதழ் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இரு சக்கர வாகனத்திற்கான ஓட்டுநர் உரிமமோ, காப்பீடோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தானது இரு சக்கர வாகன ஓட்டுநர் கவன குறைவாகவும், சட்டத்திற்கு விரோதமாகவும் எடுத்து வந்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு உரிய உரிமம் இல்லாததால் 2 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மற்றும் வட்டி அதிகம் என்றால் சரியல்ல. என் மகனுக்கான தொடர் சிகிச்சைக்கான மருத்துவ ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதே போல் நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளை சம்மந்தப்பட்ட மருத்துவமனை மூலமாக தான் நிறுபிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை:-</u>**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.
Sd/P. Shunmugaraj, M.L.,
Principal Subordinate Judge,
Hosur.